திரு. எம். எஸ். மணி: பழைய அரசாங்கத்தில் மரத்தில் ஏறி பதநீர் இறக்கத்தான் லைசென்ஸ் கொடுத்தார்கள், விற்பனை செய்ய லைசென்ஸ்கள் கொடுக்கப்படவில்லை. பல போராட்டங் களுக்குப் பிறகும் கொடுக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: இது லைசென்ஸ் களைப் பற்றியது. அதுபற்றிய விவரங்கள்தான் என்னிடத்தில் இருக்கின்றன.

*451 வினு.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மதிப்பிற்குரிய முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மரமேறும் தொழிலாளர்களுக்கு தற்போது பதநீர் இறக்க ஆண்டுக்கு ஒரு முறை வழங்கிவரும் லைசென்சு முறையை, ஆண்டு தோறும் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் மாற்றியமைக்க வேண்டும் என மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன மாநாடுகளில் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளன மாநாடுகளில் நிறைவேற்றப் பட்ட எத்தீர்மானமும் அரசாங்கத்திடம் வந்து சேரவில்லை.

போலீஸ் துறையிலுள்ள நாய்கள்

*452 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் போலீஸ் மோப்ப நாய்கள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளை மேலும் அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: (அ)—

சென்னை மாநகரம்—

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை	8 நாய்கள்
தற்போதுள்ள எண்ணிக்கை	3 நாய்கள்
	4 நாய்க் குட்டிகள்

மதுரை—

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை	5 நாய்கள்
தற்போதுள்ள எண்ணிக்கை	5 நாய்கள்

கோயம்புத்தூர்—

ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை	3 நாய்கள்
தற்போதுள்ள எண்ணிக்கை	1 (பயிற்சியில் உள்ளது)

(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த எண்ணிக்கை குறைந்ததற்கான காரணம் என்ன? சரியான முறையில் வேலை செய்யவில்லை என்ற காரணத்தால் குறைக்கப்பட்டதா அல்லது என்ன காரணத்தால் குறைக்கப்பட்டது?